## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
## S.C.No.186/2021

2024 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 05 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நாகராஜ் (அ.சா.3) | தொழில் | : | சலவைத் தொழில் |
| த/பெ., க/பெ. | : | சின்னச்சாமி | வயது | : | 55 |
| கிராமம் | : | பெரிச்சிபாளையம் | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 05.12.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் பெரிச்சிபாளையத்தில் குடியிருந்து சலவைத் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 15.11.2017 ஆம் தேதியன்று கீரனூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண்.268/2017 என்ற வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் என் முன்னிலையிலும், ஆறுமுகம் என்பவர் முன்னிலையிலும் தயார் செய்தார் என்றும், பார்வை

**மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.12.05 18:19:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**